வேலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் ஒருங்கிணைந்த மாவட்டத்தில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களில் ஒருவரும் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் நகர செயலாளர் மா.பா.சாரதி அவர்களின் படத்திற்கு வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன், மாநகராட்சி மேயர்சுஜாதா ஆனந்தகுமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் மா.ப. அன்புநிதி, மண்டலகுழு தலைவர் வீனஸ் நரேந்திரன் மற்றும் மாவட்ட, மாநகர,பகுதி கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பேருந்து நிலையத்தில்

இளம்பெண்ணுக்கு த.வெ.க. நிர்வாகி பாலியல் தொல்லை

திருவாரூரில் பரபரப்பு!

திருவாரூர், ஜூன் 20-

திருவாரூர் பஸ் நிலையத்தில் இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த த.வெ.க. நிர்வாகி மற்றும் இன்ஜினியரிங் மாணவன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். திருவாரூர் டவுன் பகுதியை சேர்ந்த 27 வயதான இளம்பெண். உறவினர் வீட்டுக்கு சென்று இருந்தவர், நேற்று முன்தினம் இரவு பஸ்சில் புதிய பேருந்து நிலையம் வந்தார். பின்னர் அங்கிருந்து வீட்டுக்கு செல்வதற்காக தந்தை வருகைக்காக காத்து இருந்தார். அப்போது அங்கு பைக்கில் வந்த 2 நபர்கள், தனியாக நின்ற அந்த பெண்ணிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்டனர். இதனால் அந்த பெண் பதறி அழுதுள்ளார். சிறிது நேரத்தில் பெண்ணின் தந்தை பைக்கில் பேருந்து நிலையம் வந்தார். அப்போது அவரிடம் நடந்த விபரத்தை கூறி அழுதுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அவர், 2 பேர் வந்த பைக்கின் சாவியை பிடுங்கி வைத்து கொண்டார்.

இதுதொடர்பாக திருவாரூர் டவுன் காவல் நிலையத்துக்கு தகவல் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த 2 பேரை பிடித்து காவல் நிலையம் கொண்டு வந்து விசாரித்தனர். விசாரணையில், திருத்துறைப்பூண்டி அடுத்த ஆலத்தம்பாடி கரும்பியூர் பகுதியை சேர்ந்த திருத்துறைப்பூண்டி வடக்கு ஒன்றிய தவெக செயலாளர் ஆனந்த் (எ) பிரவீன்குமார் (24), அதே பகுதியை சேர்ந்த அவரது நண்பர் நாகப்பட்டினத்தில் தனியார் இன்ஜினியரிங் கல்லூரியில் 2வது ஆண்டு படித்து வரும் அசோக் (26) என தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப் பதிந்து 2 பேரையும் கைது செய்தனர். இந்தநிலையில் ஒன்றிய செயலாளார் ஆனந்த் (எ) பிரவீன் குமாரை கட்சியில் இருந்து நீக்கி திருவாரூர் தெற்கு மாவட்ட செயலாளர் பாரதி நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

மாணவியிடம் ஆபாச பேச்சு

அரசுப்பள்ளி ஆசிரியர் கைது

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தை சேர்ந்த 17 வயது மாணவி சிறுமுகை பகுதியில் உள்ள அரசு பள்ளியில் பிளஸ் 2 முடித்து விட்டு தற்போது கோவை தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயின்று வருகிறார். இவர் பள்ளியில் பயின்றபோது அங்கு கோவை துடியலூர் என்ஜிஜிஓ காலனி துரை ராஜ் நகரை சேர்ந்த சுரேஷ் (43) என்பவர் ஆசிரியராக பணி புரிந்துள்ளார். அப்போது, அவர் பாடத்தில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் தன்னை அழைக்குமாறு செல்போன் எண்ணை கொடுத்துள்ளார். இந்நிலையில் கடந்த 11ம் தேதி ஆசிரியர் சுரேஷ், 17 வயது மாணவியை செல்போனில் அழைத்து ஆபாசமாக பேசியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து மாணவி அளித்த புகாரின் பேரில் மேட்டுப்பாளையம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் போக்சோவில் வழக்குப்பதிந்து நேற்று முன்தினம் ஆசிரியர் சுரேஷை கைது செய்தனர்.

பெண்ணை தாக்கி கடத்த முயன்ற விஜய் கட்சி நிர்வாகி

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே உஞ்சனை குட்டிக்காபாளையத்தில் வசித்து வரும் 35 வயதான பெண்ணின் கணவர், பார் ஒன்றை லீசுக்கு எடுத்து நடத்தி வருகிறார். கடந்த சில நாட்களாக குமரமங்கலம் பகுதியை சேர்ந்த தவெக ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் நவீன் என்பவர், காரில் பின்தொடர்ந்து வந்து அந்த பெண்ணிடம் அநாகரீகமான முறையில் நடந்து கொண்டார். இந்நிலையில், நேற்று முன்தினம், எளையாம்பாளையம் பிரிவு சாலை அருகே, அப்பெண் காலைக்கடன் கழிக்க வந்த போது, இரு நண்பர்களுடன் வந்த நவீன், காரில் ஏறுமாறு அப்பெண்ணை கட்டாயப்படுத்தி உள்ளார். அதிர்ச்சியடைந்த அவர், எதற்காக என்னை அழைக்கிறீர்கள் என கேட்ட போது, அப்பெண்ணின் கையை முறுக்கி சாதி பெயரைச் சொல்லி திட்டி அடித்துள்ளார். இதனையடுத்து அந்த பெண் சத்தமிட்டதால், அவரை கீழே தள்ளி விட்டு காரில் தப்பி ஓடி விட்டார். இதில் காயமடைந்த அப்பெண், திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதுகுறித்து, திருச்செங்கோடு புறநகர் காவல் நிலையத்தில் அவர் புகார் அளித்தார். இதன்பேரில் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

திருடன் என நினைத்து வடமாநில வாலிபர் அடித்துக் கொலை:

வேலூரில் பயங்கரம்!

வேலூர்,ஜூன் 20-

வேலூர் காகிதப்பட்டறையில் திருடன் என நினைத்து வடமாநில வாலிபரை சிலர் அடித்து கொலை செய்தனர். இதுகுறித்து 3 பேரை பிடித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

வேலூர் மாநகரில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவும் மாவட்டத்தில் கட்டிடப் பணி, விவசாயப்பணி உள்ளிட்ட வேலைகளுக்காகவும் வடமாநிலங்களில் இருந்து ஏராளமானோர் வேலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வந்து தங்கி உள்ளனர். வேலை இல்லாதபோது வடமாநில வாலிபர்கள் கும்பல், கும்பலாக நகரின் பல பகுதிகளில் சுற்றித்திரிகின்றனர். அவர்களது நடவடிக்கையில் சந்தேகமடையும் அப்பகுதியை சேர்ந்தவர்கள், திருடன் என நினைத்து தாக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கிறது. இதேபோல் கடந்த 7ம் தேதி காட்பாடி தாராபடவேடு குளத்துக்கரை தெருவில் 30 வயதுள்ள வடமாநில வாலிபர் ஒருவரை அப்பகுதியைச் சேர்ந்த சிலர் கல்லால் தாக்கியுள்ளனர். தகவலறிந்த காட்பாடி போலீசார் சம்பவ இடம் சென்றனர். அங்கு தலையில் கற்கலால் கொடூரமாக தாக்கப்பட்டு படுகாயமடைந்த வாலிபரை மீட்டு வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக காட்பாடி போலீசார் வழக்குப்பதிவு செய்து, ஒருவரை பிடித்து விசாரித்து வந்தனர்.

இந்நிலையில், வேலூர் காகிதப்பட்டறை செல்லியம்மன் கோயில் தெருவில் உள்ள ஒரு வீட்டின் சுற்றுச் சுவர் அருகே நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் ஒரு மர்ம நபர் சுற்றித்திரிந்துள்ளார். பின்னர் ஒரு வீட்டு சுவர் அருகே உட்கார்ந்திருந்தாராம். எனவே அந்த நபர் வீடு புகுந்து திருட வந்துள்ளார் என சந்தேகமடைந்த அப்பகுதியைச் சேர்ந்த சிலர் சரமாரி தாக்கி உள்ளனர். இதில் படுகாயமடைந்த நபர் மயங்கி விழுந்தார். தகவலறிந்த வேலூர் வடக்கு போலீசார் படுகாயமடைந்த வாலிபரை மீட்டு வேலூர் பென்ட்லென்ட் அரசு மருத்துமவனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு நேற்று அதிகாலை கழிவறையில் அந்த வாலிபர் இறந்து கிடந்ததாக தெரிகிறது. தகவலறிந்து போலீசார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக போலீசார் நடத்திய விசாரணையில், இறந்த நபர் மேற்குவங்க மாநிலம் ஜல்பைகுரி மாவட்டத்தை சேர்ந்த ஜோய் ஹிந்த் முண்டா(35) என்பது தெரியவந்தது. அவரை தாக்கியதாக சந்தேகத்தின்பேரில் அப்பகுதியைச் சேர்ந்த 3 பேரை பிடித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர்

காடுவெட்டி தியாகராஜனின் தந்தை நடேசன் முத்துராஜா மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 20

திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜனின் தந்தை நடேசன் முத்துராஜா அவர்கள் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் அவர்களது தந்தையார் நடேசன் முத்துராஜா அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

ஆளாக்கி, அறிவூட்டி, அவையத்து முந்தி இருப்பச் செய்த அன்புத் தகப்பனாரை இழந்து தவிக்கும் சகோதரர் காடுவெட்டி தியாகராஜன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளியை வெட்டிய போதை த.வெ.க. பிரமுகர்!

மயிலாடுதுறை, ஜூன் 20-

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகா அரையபுரத்தை சேர்ந்தவர் ரமேஷ்(45). கூலித்தொழிலாளி. அதே பகுதியை சேர்ந்தவர் கார்த்திக் (28). த.வெ.க. பிரமுகரான இவரது தாயார் குணவதி. கடந்த ஆண்டு பண தேவைக்காக ரமேஷின்தாய்வெள்ளையம்மாளிடம் தங்க மூக்குத்தியை வாங்கி உள்ளார். அதை திருப்பி கொடுக்காத நிலையில் குத்தாலம் போலீசார் மூலமாக நகைக்கான பணத்தை ரமேஷ் பெற்றுள்ளார். இதனால் இவர்களுக்கு இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலையில், கடந்த 12ம்தேதி நடைபெற்ற கோயில் விழாவில் ரமேஷ் உணவு பரிமாறியுள்ளார்.

அப்போது, பந்தியில் அமர்ந்திருந்த குணவதிக்கும் உணவு பரிமாறிய போது இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக குணவதி, குத்தாலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு குணவதியுடன் ரகளையில் ஈடுபட்ட ரமேஷ், பின்னர் வீட்டில் தூங்க சென்று விட்டார். தகவல் தெரியவந்து போதையில் அவரது வீட்டுக்குள் புகுந்த கார்த்திக், தூங்கி கொண்டிருந்த ரமேஷை அரிவாளால் சரமாரி வெட்டி விட்டு தப்பி சென்றார். ரத்த வெள்ளத்தில் கிடந்த ரமேஷை உறவினர்கள் மீட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அவருக்கு 30க்கும் மேற்பட்ட தையல்கள் போடப்பட்டு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக ரமேஷ் கொடுத்த புகாரின் பேரில், குத்தாலம் போலீசார் வழக்கு பதிந்து தவெக பிரமுகர் கார்த்திக், அவரது தாயார் குணவதி ஆகியோரை நேற்று கைது செய்தனர்.

பெண்ணடிமை விலங்கினைத் தகர்த்த –

பெண் உரிமைகளை போராடிப் பெற்ற போராளிகள் இயக்கம் தி.மு.க.!

சங்ககால வாழ்வியல் முறைகளும், வள்ளுவரின் வாழ்க்கை நெறிகளையும் இரும்புத் திரையிட்டு மறைத்துவிட்டு வேதகால வாழ்க்கைமுறையை தமிழ்நாட்டில் ஆரியர்களால் பரவலாக்கப்பட்ட காரணத்தினால் தமிழர்களது உயர்ந்த நாகரிக வாழ்க்கை நெறி சிதறடிக்கப்பட்டு ஆரிய கலாச்சாரம் எல்லாத் துறைகளிலும் தலைதூக்கியமையால், பெண்கள் அடிமையாக்கப்பட்டார்கள்.

அவர்களது வாழ்க்கைமுறை சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் முற்றிலும் உரிமையிழந்த போகப் பொருளாகத்தான் சமூகத்தில் கருதப்பட்டார்கள். பெண்கள், ஆண்களுக்கு என்றும் அடிமைதான். அவர்களுக்கென எந்த தனி உரிமையும் இல்லை என்ற இருண்ட காலத்தில் தான் தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என்கின்ற தமிழ்ப் பண்பாட்டுச் சிந்தனையாளர்கள், மகளிர் உரிமைகளுக்காக போராட்டக் களங்களை அமைத்து தமிழ்நாட்டில் நீண்டகால போராட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்தப் பெண்ணுரிமைகளின் அடிப்படை நியாயங்கள் வாதங்கள் எழுத்துவடிவம் பெற்று தந்தைப் பெரியாரின் “குடியரசுப்” பத்திரிகையிலும், “விடுதலைப்” பத்திரிக்கையிலும், பேரறிஞர் அண்ணாவின் “திராவிட நாடு” “காஞ்சி” இதழ்களிலும், ஆங்கில இதழ்களான “Home land” “Home Rule” ஆகிய பத்திரிகைகளிலும் முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான “முரசொலியிலும்” பெண்ணுரிமைகளுக்கான அடிப்படை நியாயங்களை உள்ளடக்கிய வாதப்பிரதிவாதங்களும், கட்டுரைகளும் பெருமளவில் இடம்பெற்றுள்ளது என்பதும் அதன்மூலம் தமிழ்நாட்டு மக்கள் விழிப்புணர்வு பெற்று பெண்ணடிமை என்கின்ற காட்டுமிராண்டித்தனமான பெண் ஒடுக்குமுறைகளுக்கும், கண் மூடி த்தனமான பழக்கவழக்கங்களுக்கும் எதிரான பல் வேறு போராட்டக் களங்களை தமிழ் நாட்டில் அமைத்தார்கள்.

பொன். முத்துராமலிங்கம்,
முன்னாள் அமைச்சர்,
உயர்நிலை செயல்திட்டக் குழு
உறுப்பினர்

இந்த தொடர் போராட்டங்களின் மூலம் ஓரளவு வெற்றியும் கண்டார்கள். இந்தப் போராட்டத்தின் ஒரு கட்டமாக 1938 ஆம் ஆண்டு இந்தித்திணிப்பை எதிர்த்து தந்தைப் பெரியார் நடத்திய அந்த நடைப்பயணப் போராட்டத்தில் திராவிட இயக்கத்தின் புரட்சிகரமான சிந்தனைகளுக்கு தங்களை ஈடுபடுத்திக் கொண்ட பெண்கள் பலர் இந்த போராட்டத்திலே கலந்து கொண்டார்கள் என்பது இன்றைய இருபால் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான செய்தியாகும்.

இப்படி பல்வேறு போராட்டங்களைத் திராவிட இயக்கங்கள் ஒன்றிணைந்து தொடர்ந்து மேற்கொண்டதன் விளைவாகத்தான் 1967ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் மூன்று வரலாறு போற்றும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவைகள்தான், சென்னை மாகாணம் தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்படும். சுயமரியாதை திருமணங்கள் சட்டபூர்வமாக்கப்படும். இந்தித்திணிப்பை என்றும் எதிர்ப்போம். தமிழ்நாடு என்றும் தமிழ்,ஆங்கிலம் என்ற இரு மொழிக்கொள்கையைத்தான் பின்பற்றும் என்ற சட்டங்களாகும்!

இந்தச் சட்டங்களை வடிவமைத்தது பேரறிஞர் அண்ணா தலைமையில் உருவான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை இன்றைய இருபால் இளைஞர்களும் அறிந்து விழிப்புணர்வை பெற்றாக வேண்டும்.

சுயமரியாதை திருமணங்கள் சட்டஅங்கீகாரம் பெற்றது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் தான். இதன்பின்னர்தான், இயல்பாக மாலை மாற்றிக் கொண்டு மங்கல நாண் அணிவிக்கின்ற திருமண நிகழ்ச்சிகளும், மன ஒப்புதலோடு மாலை மாற்றிக் கொள்கின்ற திருமணங்களும் சட்ட அங்கீகாரம் பெற்றது என்பதை இன்றைய இருபால் இளைஞர்களுக்கு சுட்டிக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு எளிய முறையில் மாலை மாற்றி மங்கல நாண் அணிவிக்கும் திருமண நிகழ்ச்சிகள் சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல. மாறாக, அம்மி மிதித்து அருந்ததிப் பார்த்து ஆரிய புரோகிதர்களால் கன்னிகா தானம் செய்கின்ற திருமணங்கள்தான் சட்டப்படி செல்லத்தக்க திருமணங்களாகும். இந்த அவல நிலையைத் தகர்த்து தரைமட்டமாக்கிவிட்டு சுயமரியாதை திருமணங்களை சட்டபூர்வமாக்கிய புரட்சிகரமான இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம் என்பதை இருபால் இளைஞர் களும் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பயணம் முடிந்துவிடவில்லை மாறாக, ஒன்றியத்தில் சனாதன ஆட்சி தொடருமட்டும், இந்தப் பயணமும் தொடரும்!

1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த பொழுது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்களுக்கு தங்களது பொதுக் குடும்ப பூர்வீகச்சொத்தில் ஆண்களுக்கு நிகரான சமபங்கு உண்டு என்பதை உறுதிசெய்யும் சட்டத்தை நிறைவேற்றினார்கள். அந்த சட்டமன்றக் கூட்டத்தில்தான் மாண்புமிகு முதலமைச்சர் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள் தனக்கு இந்தச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற உந்துதல் ஏற்படுவதற்குக் காரணம் என்னுடைய தலைவர் தந்தை பெரியார் அவர்கள் 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டிலே நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்கு தங்கள் குடும்ப பூர்வீகச்சொத்தில் ஆண்களுக்கு நிகரான சமபங்கு வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

எனவே, அந்தப் புரட்சிகரமான தீர்மானம்தான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எனக்கு உந்துசக்தியாக இருந்தது எனக் குறிப்பிட்டார். இந்த உரிமைகளை முழுவீச்சில் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சம உரிமைப்பெற்ற பெண்களைக் கண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பூரிப்பும், பெருமகிழ்ச்சியும் அடைகிறது. இந்த வரலாற்றுப் பக்கங்களை பெண்கள் அறிந்திட வேண்டும் என்பதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

இன்னும் இந்த வரலாறு பற்றி மேலும் அறிந்து கொள்ள ஆர்வமுள்ள இருபால் இளைஞர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் பாரதிதாசன் பாடல்கள் அடங்கிய புத்தகத்தின் 81ம் பக்கத்திலிருந்து படியுங்கள் புதிய வெளிச்சம் உங்களுக்குத் தென்படும். (பாரதிதாசன் பாடல்கள் பக்கம் 79 தொகுப்பு டாக்டர் தொ.பரமசிவன்)

பெண்கள் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகரான சமஉரிமை பெற்றவர்கள் என்பதை சித்தாந்த அடிப் படையிலும், சட்ட அடிப்படையிலும் உறுதி செய்த இயக்கம் “திராவிட இயக்கம்”. ஆம்! திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை இன்றைய மகளிர் சமூகம் வரலாற்றை திரும்பிப் பார்த்து விழிப்புணர்ச்சி பெற வேண்டும். இதுமட்டுமல்ல, இனியும் பெண்களின் உரிமைக்காகவும், பாதுகாப்பிற்காகவும் தொய்வின்றி தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் பெண்கள் பாதுகாப்பு இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை விழிப்புள்ள பெண் இனம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்திய அரசியல் சட்டப்படி உருவாக்கப்பட்டுள்ள நாடாளுமன்றம், சட்டமன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகிய மக்கள் பிரதிநிதித்துவ மன்றங்களில் பெண்களுக்கான 33 சதவீத ஒதுக்கீடு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்று தோழமை கொண்ட இயக்கங்களோடு இணைந்து தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் இயக்கம் “திராவிட முன்னேற்றக் கழகம்தான்”. ஆனால் இந்த மசோதா நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்படாமல் தடுத்துநிறுத்துகின்ற கட்சி ஒன்றிய ஆட்சியிலே உள்ள பாரதிய ஜனதா கட்சி என்பதை தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆட்சி அதிகாரத்தை ஜனநாயகத்திலே கைப்பற்றுவது என்பது ஒரு கட்டம். அதில் மக்களின் பெரும்பான்மை எடுக்கும் முடிவே இறுதியானது.

அரசியல் வெற்றிக்காக மட்டுமே போராடுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. மாறாக, தேர்தல் முடிவுகளை புறந்தள்ளிவிட்டு, மக்களின் வாழ்விற்காகவும், வளர்ச்சிக்காகவும் தொடர்ந்து தொய்வின்றி பயணம் மேற்கொள்ளும் ஒரு போராளி இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, இருபால் இளைஞர்களும் உங்கள் உரிமைகளை தக்கவைத்துக் கொள்ளவும், எஞ்சிய உரிமைகளை ஈட்டிப்பெறவும் திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற இந்தப் போராளிகள் நிறைந்த இயக்கம் உங்களை வழிநடத்தும். உங்களோடு இணைந்து போராடும், விளைவுகளைப்பற்றி கவலைப்படாமல் உங்களுக்கு என்றும் துணைநிற்கும். இருபால் இளைஞர்களும் விழிப் புணர்வுபெற்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சித்தாந்த வழியினையும், வழிகாட்டுதலையும் பின்பற்றுங்கள். உங்கள் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். எதிர்கால சமுதாயத்தின் வார்ப்படங்களாம் இருபால் இளைஞர்களும் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்திட திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தங்களை இணைத்துக் கொள்ள விரைந்து வாரீர்! களம் காண்போம் காப்போம் நம் உரிமைகளை!!